**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06012021-4172

Volume: 6

Issue: 1

Month: July

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 14.04.2021

Accepted: 21.05.2021

Published: 01.07.2021

Citation:
Chandrasekaran, M. "Social Perception in Ingurunooru." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 1, 2021, pp. 58–66.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i1.4172

*Corresponding Author:
chandruchellam19@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Social Perception in Ingurunooru

**M. Chandrasekaran**
*Post Doctoral Fellow, Department of Tamil Studies*
*Bharathidasan University, Tiruchirappalli*
http://orcid.org/0000-0002-6224-9691

**U. Alibava**
*Professor & Head, Department of Tamil Studies*
*Bharathidasan University, Tiruchirappalli*

**Abstract -** The Sangam Tamil Literature visualizes the oldtraditions of the Tamil Society. One of these descriptions in "Ingurunooru" suggests living of individuals and social biographies. Sangam pura poem's depict events such as force, war, victory, fame and sangam aga poem's describes on love life such as theft and chastity. The customs and interactions of the Thalaivan (Hero), Thalaivi (Heroine), Thozhi (Friend) based on the social community. And they are connected and controlled by the social events around them. Social Cognition is the physical appearance of other people, verbal, comments from nonverbal communications are also occurring. This article gives brief overview on social perception.

**Key Words:** Literature, Sangam Literature, Ingurunooru, Agam, Puram, Life, Social, Perception, Physical appearance, Verbal, Non verbal communication

**References**

1. Agolkar, V.V, Vedhamani Manivel N. (T.L)., (2018). *Social Psychology*, Chennai : TamilNadu Text Book and Educational Service Corporation.
2. Aronson, Elliot; Wilson, Timothy D.; Akert, Robin M. (2010). Social Psychology Seventh Edition, Upper Saddle River, NJ : Pearson Education.
3. Parmesh S.R. (2018). Social Psychology, Chennai : TamilNadu Text Book and Educational Service Corporation.
4. Somasundaranar P.V. (2009). Ingurunooru, Chennai : Kazhaga Veliyeedu

# ஐங்குறுநூற்றில் சமூகப் புலன் காட்சி

***முனைவர் ம. சந்திரசேகரன்***
முனைவர் பட்ட மேலாய்வாளர், தமிழியல்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி

***பேராசிரியர் உ. அலிபாவா***
தலைவர், தமிழியல்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி

***ஆய்வுச்சுருக்கம்***

*தமிழ்ச் சமூகத்தின் பெருமைகளைச் சங்க இலக்கியங்கள் இயம்புகின்றன. இவ்விலக்கியங்களுள் ஒன்றான ஐங்குறுநூறு தனிமனித வாழ்வியலையும் சமூக வாழ்வியலையும் எடுத்துரைக்கின்றன. படை, போர், வெற்றி, ஈகை, புகழ் போன்ற நிகழ்வுகளைச் சங்கப் புறப் பாடல்களும் களவு, கற்பு போன்ற காதல் வாழ்வியல்களைச் சங்க அகப் பாடல்களும் விளம்புகின்றன. இவ் வாழ்வியலை மேற்கொள்ளும் தலைவன், தலைவி, தோழி, செவிலி முதலானோரின் பழக்க வழக்கங்கள், தொடர்புகள் யாவும் சமூகம் சார்ந்தே இயங்குகின்றன. மேலும், இவர்கள் காணும் சமூக நிகழ்வுகளால் உந்தப்படுகின்றனர் கட்டுப்படுத்தப்படுகின்றனர். சமூகப் புலன் காட்சி என்பது பிற நபர்களின் உடல் தோற்றம், வாய்மொழி, சொற்களற்ற தகவல் தொடர்புகளிலிருந்து கருத்துகளையும் அனுமானங்களையும் அறிந்து கொள்வதாகும். இங்ஙனம் ஐங்குறுநூற்றில் காணலாகும் சமூகப் புலன் காட்சிகளை இக்கட்டுரை ஆய்ந்துரைக்கிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ் இலக்கியம், சங்க இலக்கியம், ஐங்குறுநூறு, அகம், புறம், வாழ்வியல், சமூகம், புலன் காட்சி, உடல் தோற்றம், வாய்மொழி, சொற்களற்ற தகவல்.*

மனிதர்கள் காணும் காட்சிகள் யாவும் புலன் காட்சியுள் அடங்கும். ஒருவர் காணும் புலன் காட்சி, அவரது மனநிலை, சூழ்நிலைகளைப் பொறுத்தே அமைகிறது. அதாவது, மகிழ்ச்சியாக இருக்கும்போது தனக்கு எதிரே காணும் காட்சிகள் வழி மகிழ்கின்றான் தன்னுள் பயந்துகொண்டிருக்கும் போது தனக்கு எதிரே தான் நினைத்தைக் கண்டு அச்சப்படுகிறான். இங்ஙனம் ஒருவர் காணுகின்ற ஒவ்வொரு புலன் காட்சியும் அவர் நினைவில், செயலில், உந்தப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுகின்றன.

### புலன் காட்சி விளக்கம்

புலன் காட்சி என்பது புலன் காட்சியின் அனுபவத்திற்கும் (Perceptual Experience) வெளி உலகில் புலன் காட்சியின் மூலம் தெரிந்து கொள்ளுகின்ற ஒரு பொருளுக்கும் இடையே இருக்கும் ஒற்றுமைகளை, சார்புத் தன்மைகளை விளக்குவதாகும் (பரமேஷ் செ.ரா. 2018. சமூக உளவியல், ப.237).

வி.வி. அகோல்கர், "புலன் காணும் ஆற்றலோடு தான் நாம் உலகில் தோன்றுகிறோம். காணும் பொருளினுள் ஏதேனும் ஒரு பொருண்மையைக் (Meaning) காண்பதே புலக்காட்சியாகும்" எனப்

புலன் காட்சிக்கு விளக்கம் தருகிறார் (அகோல்கர் வி.வி. வேதமணிமனுவேல் என். (த.ஆ.)., 2018. சமூக உளவியல், பக். 183 - 184).

ஆரோன்சன் குழுவினர், "சமூகப் புலன் காட்சி என்பது மக்கள் எவ்வாறு தன்னை சமூகத்தில் பதிவிடுகின்றனர், பிற மனிதர்களிடம் தன் அனுமானத்தை வெளிப்படுத்துகின்றனர் என்பதை கற்பிக்கிறது" என்கின்றனர் (Aronson, Ellit; Wilson, Timothy D.; Akert, Robin M. 2010. Social Psychology Seventh Edition, Upper Saddle River, NJ : Pearson Education, p. 83).

சமூக உளவியலாளர்கள் சமூகப் புலன் காட்சி வாயிலாக ஒரு மனிதன் தன்னைச் சார்ந்த சமூகத்தின் மனிதர்களை எங்ஙனம் பார்த்துப் புரிந்து கொள்கின்றான் என்பதை ஆராய்கின்றனர். மேலும், "ஏன்? ஒரு சில தனித்த சமூகக் குழுவினர் பிறரை ஒரு வகைத்தான மனப்போக்கினையே புரிந்து கொள்கின்றனர். அதற்கேற்ப எப்போதும் அவர்களிடமிருந்து பிரிந்து ஒதுங்கியோ அல்லது நெருங்கியோ பழகுகின்றனர் என்றும், எத்தகைய காரணிகள் அங்ஙனம் அவர்கள் பிறரை விரும்பவும் வெறுக்கவும் செய்கின்றன என்பது பற்றியும் ஆய்கின்றனர்" (செ.ரா. பரமேசு், சமூக உளவியல், ப.238). இவ் ஆய்வினை,

1. தன்னைப் பற்றியும் தான் பிறருடன் இடைவினை புரியும் புலன் காட்சி
2. தலைமைத் தன்மைப் பற்றியப் புலன் காட்சி
3. பிற சமூகச் செயல் போக்குகள் பற்றியப் புலன் காட்சி

எனும் மூன்று நிலையில் ஆராய்கின்றனர் (மேலது, ப.238).

சமூக உளவியலாளர்கள் இரு வகைப்பட்ட காரணிகளால் புலன் காட்சி அமைகிறது என்கின்றனர். அவையாவன:

1. அமைப்புக் காரணி (Structural Factors)
2. செயல்பாட்டுக் காரணி (Functional Factors)

என்பனவாகும் (மேலது, ப.240).

அமைப்புக் காரணி என்பது வெளி உலகில் பொருள்களின் வழி நமக்கு ஏற்படுகின்ற தூண்டுதல்களை உணர்த்துவதாகும். அஃதாவது, நாம் தவறாக நோக்குகின்ற மாயத் தோற்றங்கள் அப் பொருள்களின் அமைப்புத் தோற்றத்தைச் சார்ந்தே நிகழுகின்றன. அந்தப் பொருள்களின் அமைப்புத் தோற்றங்களே நமது புலன் காட்சியினைக் கட்டுப்படுத்துகின்றன.

செயல்பாட்டுக் காரணியில் நாம் காணுகின்ற தோற்றம், நமது தேவைகள், மன உந்துதல்கள், கடந்த கால அனுபவங்கள், நினைவுகள் போன்ற உள் உலகக் காரணிகளைப் பொறுத்து அமைகின்றன (மேலது, ப.240).

சமூகக் காரணிகள் நமது புலன் காட்சியினைப் பாதிக்கின்றன. சமூகம் எந்தெந்தச் செயல்களை அங்கீகரிக்கின்றதோ, அவற்றையே நாம் காண் கண்டாலும் தெரிந்து கொள்ள முயற்சிக்கின்றோம். சமூகத்தின் கண்களுக்குப் புறம்பான செயல்களை நாம் பார்க்க விரும்புவதில்லை என்பதோடு, பார்க்க நேரிட்டாலும் பார்க்காதவர்கள் போல் நடந்து கொள்ளவும் கட்டுப் படுத்தப்படுகின்றோம்.

### புலன் காட்சியின் விதிகள்

கெஸ்டால்ட் (Gestalt) உளவியலாளர்கள் புலன்காட்சியின்அமைப்புத்தன்மைகளைப் பல்வேறு சோதனைகளின் வழியாக,

1. புலன் நோக்கின் மாற்றம்
2. புலன் காட்சி, பிரதி உணர்வுகளை ஒருங்கே இணைக்கின்ற அல்லது குழுமம் படுத்துகின்ற தன்மையது
3. புலன் காட்சி என்பது ஒரு தனித்த பிரதிவினை

4. தகுதியான் பின்னணியுடன் இருக்கின்ற பொருள்கள் நம்மை எளிதில் கவர்கின்றன
5. புலன் காட்சியின் பொது இடைவெளிகள் புர்த்தி செய்யப்படுகின்றன குறையும் அடையாள விதி

எனும் விதிகளை ஆராய்ந்து கண்டறிந்துள்ளனர் (மேலது, பக். 241 - 243).

### புலன் காட்சிப் பிரதிவினைகளைப் பாதிக்கும் அடிப்படைத் தோற்ற முறைகள்

சமூக உளவியல் வல்லுநர்களான சீகார்டும் பேக்மேன்னும் (Secord and Backman), கீழ்க்கண்ட ஐந்து அடிப்படைத் தோற்ற முறைகளைப் புலன் காட்சியின் பிரதி வினைகளைப் பாதிப்பனவாகக் கூறுகின்றனர். அவையாவன:

1. ஒரு குறிப்பிட்ட கால நிலையில் ஒருவர் தனக்குக் கிட்டுகின்ற எண்ணற்ற புலன் தூண்டுதல்களின் ஒரு சிலவற்றை மட்டுமே தனித்துத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கே பிரதிவினை புரிகின்றார்.
2. முதல் புலன் காட்சியின் அநுபவங்கள் இரண்டாவதாக நிகழும் அப்பொருளைப் பற்றிப் புலன் காட்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. இங்கே முன்னதைவிடக் குறைவான நேரமும் திறனும் செலவிடப்படுகின்றன.
3. பின்னால் நிகழும் புலன்காட்சிகள் அதற்குமுன் நிகழ்ந்த அப்பொருளின் புலன் காட்சியால் விளைந்த விருப்பு வெறுப்புகளால் பாதிக்கப்டுகின்றன. நாம் முதல் புலன் காட்சியின் விளைவு மகிழ்ச்சிகரமாக இருப்பின் இரண்டாவது முறை அதே பொருளை நோக்கும்போது விரும்பி ஏற்றுப் பார்க்கின்றோம். மாறாக அது வெறுப்புட்டும் தன்மை உடையதாக இருப்பின் அப் பொருளின் சாயல் தென்பட்ட மறுவினாடியே அதனைப் பார்க்க மறுத்து ஒதுங்குகின்றோம்
4. ஒரு பொருளின் புலன் காட்சியானது அந்தச் சூழ்நிலையில் அப்போது நம்மிடம் ஏற்பட்டுள்ள மன உந்துதல்கள், ஊக்கிகள் போன்றவற்றால் பாதிக்கப்படுகின்றன. பசி, களைப்பு, சோர்வு, ஆவல், எதிர்ச் சார்புகள் போன்ற எண்ணற்ற காரணிகள் நாம் ஒரு பொருளைப்பார்த்துத் தெரிந்து கொள்வதில் வினையாற்றுகின்றன.
5. ஒரு தனி மனிதனின் புலன் காட்சியினை விஞ்ஞானிகள் நேரடியாகக் கண்டு பகுத்தறிய இயலாது. ஆக, அவர் மறைமுகமாகவே அவற்றை யூகித்து அவற்றைப்பற்றி முடிவெடுக்கின்றனர் என்பனவாகும் (மேலது, ப.244).

### சமூக இடைவினைகள்

சமூக இடை வினைகள் பிற தனியவர்களின் அல்லது குழுவினரின் நடவடிக்கைகளை, அவற்றின் அடையாளங்களை அவை உணர்த்தும் பொருள்களை ஒருவன் புலன் காட்சியின் வழி கூர்ந்து கவனித்துத் தெரிந்து கொள்ளும்போதுதான் நிகழுகின்றன. ஆகவே, புலன் காட்சியில் பிரச்சினைகள் அவை பற்றிய அறிவு சமூக இடைவினைகளுக்கு அடிப்படைகளாய் அமைகின்றன. ரோர்சாக் மற்றும் முர்ரே (Rorschach and Murry), சமூகப் புலன் காட்சிதான் ஒரு மனிதனின் ஆளுமைத் தன்மையை (Personality) நிர்ணயிக்கின்றது என்றும் புலன் காட்சி அறிவால், முதிர்ச்சியும் தேர்ச்சியும் பெற்றுள்ளவன் சிறந்த ஆளுமைத் தன்மையைப் பெற்றிருப்பான் என்றும் கூறுகின்றனர் (மேலது, பக்.244-245).

### புலன் காட்சியில் சமூகக் காரணிகள் (Social Factors in Perception)

சமூகப் புலன் காட்சிகளை மெக்லியடு (Maclead),

1. சமூகப் புலன் காட்சி (Perception of the Social)
2. புலன் காட்சியின் சமூகக் காரணிகள் (Social Factors in Perception)

என இரண்டாகப் பிரிக்கின்றார். அஃதாவது, எங்ஙனம் மக்கள் பிற மக்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ளுகின்றனர் என்பதை சமூகப்

புலன் காட்சியும் சமூகக் காரணிகள் எத்தகைய அளவிற்கு ஒரு புலன் காட்சியில் பின் விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை புலன் காட்சியின் சமூகக் காரணிகளும் விளக்குகின்றன.

நமது மனோநிலையும் பொருளைப் பற்றிய மதிப்பீடும், ஒரு பொருளின் புலன் காட்சியை எங்ஙனம் பாதிக்கின்றன என்றும் ஒரு பொருளைப் பற்றி நாம் முன்னதாகவே அறிந்துள்ள செய்திகள் அதன் புலன் காட்சியினை எவ்விதம் பாதிக்கின்றன என்றும் ஆக இவ்விருவகைக் கேள்விகளுக்குப் பதில் அளிப்பனவாய் அமைந்து உள்ளன. நாம் ஒரு பொருளைப் பற்றி என்ன தெரிந்து கொண்டிருக்கிறோம் என்பது நாம் அதைப் பார்த்த விதத்திலிருந்தும், கேட்ட விதத்திலிருந்தும் முற்றிலும் மாறுபட்டதாகும். எல்லோரும் அப் பொருளை ஒரு வகையாகத்தான் பார்க்கிறோம், கேட்கிறோம். எனினும், அப்பொருளைப் பற்றிய அறிவு ஒவ்வொருவரிடமும் மாறுபட்டிருக்கலாம். ஆக ஒருவர் ஒரு பொருளைப் பற்றி அறிந்து கொள்வது அவரது மரபுமுறை, பழக்க வழக்கக் கலாசாரப் பகுப்புகள், இனம், மொழி, நாகரிகம் போன்றவற்றைப் பொறுத்தே அமைகின்றன (மேலது, ப.246).

## ஐங்குறுநூற்றில் புலன் காட்சி

ஐங்குறுநூற்றில் வேட்கைப் பத்து முதலாக வரவுச் சிறப்புரைத்த பத்து ஈறாக ஐந்நூறு பாடல்கள் உள்ளன. இப்பாடல்களுள் தலைவன் தலைவியை உடன் அழைத்துச் செல்லும்போது இடைச்சுரத்தின் கண் கண்டோரும், தலைவியைத் தேடிச் செல்லும் செவிலியும் அவட்கு எதிர்ப்பட்ட அந்தணர் கூறும் கூற்றுகளும், எதிர்ப்பட்ட வழிப்போக்கரிடம் தலைவி கூறும் கூற்றுகளுமாகிய உடன்போக்கின்கண் இடைச்சுரத்து உரைத்த பத்தில் காணலாகும் சமூகப் புலன் காட்சிகள் ஆராயப்படுகின்றன.

### கண்டோர் இரக்கம்

தலைவன் தலைவி உடன்போக்கு மேற்கொண்டனர். இவர்கள் இடைச்சுரத்தின் கண் ஏற்பட்ட நீர் வேட்கையைத் தணிப்பதற்கு நெல்லியின் காய்களைத் தின்று, மராமரத்து நிழலில் இளைப்பாறினர். இவர்களைப் பார்த்த கண்டோர்,

**பையங்காய் நெல்லி பலவுடன் மிசைந்து**
**செங்கான் மராஅத்த வரிநிழ லிருந்தோர்**
**யார்கொ லளியர் தாமே வார்சிறைக்**
**குறுங்கான் மகன்றி லன்ன**
**வுடன்புணர் கொள்கைக் காத லோரே**
**(ஐங்கு. 381)**

எனக் கூறி இரங்கினர். ஒருவரின் புலன்காட்சிப் பெரும்பாலும் அவரது மனநிலையையும் சூழ்நிலையையும் பொறுத்தே அமைகிறது. அஃறிணை உயிரினங்களின் வாழ்வியல் முறைகளைக் கண்டுணர்ந்து இருந்த கண்டோர், சமூகத்தில் ஓர் ஆணும் பெண்ணும் மராமரத்தின் வரிய நிழலில் இணைந்து வீற்றிருந்ததைக் கண்டே,

**குறுங்கான் மகன்றி லன்ன**
**வுடன்புணர் கொள்கைக் காத லோரே**
**(ஐங்கு. 381: 1-2)**

என்று வியப்பில் மொழிந்துள்ளனர். மகன்றில் பறவை காதல் வாழ்க்கையில் சிறிதும் பிரியாது வாழ்விலும் சாவிலும் சேர்ந்தே வாழும் இயல்புடையவை. எனவேதான் தலைவன் தலைவியை மகன்றில் பறவையோடு ஒப்புமைப்படுத்தி, "உடன்புணர் கொள்கைக் காத லோரே" என விளம்பியுள்ளனர்.

தலைவனும் தலைவியும் உடன்போக்கு மேற்கொண்ட பொழுது பாலையின் வெம்மை மிகுதியால், எயினர் வாழும் பகுதியில் சிறிது பொழுது தங்கியுள்ளனர். இவர்களின் வருகையால் அச்சிற்றூர் ஆரவாரமுடையதாய்க் காணப்பட்டுள்ளது. தலைவிக்கு அவ்வுரும் சூழலும் புதியவையாக இருந்துள்ளதால், பாலை நிலத்தில் வாழும்

கழுகு, பருந்து முதலான பறவைகளின் ஒலி அச்சத்தை உண்டாக்கியுள்ளது. இதனை, "புள்ளொலிக் கமர்த்த கண்ணள்" (ஐங்கு. 382:1) எனுமடி வெளிப்படுத்துகிறது.

ஒருவரின் உடல் தோற்றம், வாய்மொழி, சொற்களற்ற தொடர்பு முதலானவற்றிலிருந்து பிறர் சேகரிக்கும் தகவல்கள், அவர்களின் உணர்வுகள், செயல்பாடுகளை அறிந்து கொள்ள உதவுகிறது. தலைவி பறவைகளின் ஒலிகளைக் கேட்கும்போதெல்லாம் அஞ்சியதைக் கண்ட அவ்வுர்ப் பெண்டிர், "அந்தோ எளிய புள்ளொலிக்கே இம்மெல்லியள் அஞ்சுதல் காண்மின்" (ஐங்கு.382) என்று விளம்பித் தலைவியின் நிலைக்கு இரங்கியுள்ளனர். புலன் காட்சிக் கூர்ந்த கவனிப்பில் நிகழுகின்றது. நாம் ஒரு பொருளைக் காணும் போது அதன் ஒரு பகுதியைக் கண்ணுற்றுப் பிறகே மற்றொரு பகுதியைக் கவனிக்கத் தொடங்குகிறோம். இங்கே தலைவன் தலைவியின் வருகையைக் கண்ணுற்று மகிழ்ந்த எயினரின் புலன் காட்சிப் பார்வை மறு புள்ளியாகிய பறவைகளின் ஒலிகளைக் கேட்கும்போதெல்லாம் அச்சப்பட்ட தலைவியின் முகக்குறிப்பிற்கு மாறியுள்ளது. இஃது கூர்ந்த கவனிப்பில் நிகழ்ந்த புலன் காட்சியைப் புலப்படுத்துகிறது.

தலைவனின் மறனும் பேராற்றலும் அவனிடம் மிளிர்வதால் அவனது வெற்றிப்பாட்டையும் ஆண்மையையும் அவனுடைய வேலினும் அடியினும் வைத்து எயினர் குல பெண்கள்,

***.. .. .. வெள்வேற்***
***றிருந்துகழற் காளையொ டருஞ்சுரங் கழிவோ***

***(ஐங்கு. 382: 1 - 2)***

எனக் கூறியுள்ளனர். "கழல்" என்பது அடிபிறக்கிடா ஆண்மைக்கு அடையாளமாகக் காலில் மறவர்கள் கட்டும் ஓர் அணிகலனாகும். "திருந்துகழல்" என்றது பிறக்கிடாப் பேராண்மையுடைய தலைவனின் மறச் சிறப்பை உணர்த்துகிறது. மேலும், தாய், தமரைப் பிரிந்து பதினாறு வயதுடைய ஆண்மனோடு சுரம்கழிந்த தலைவியையும் அவளின் இளமை, மென்மையைக் கண்டு எயினர் குல பெண்கள், தலைவிமீது இரக்கம் கொண்டதையும் காணமுடிகிறது.

சீறூரில் பெண்மக்களை ஈன்று வளர்க்கும் தாய்மைப் பேறுடைய மனைக்கிழத்தியர்க்கு, தலைவன் தலைவியின் வருகை ஏற்படுத்திய மகிழ்ச்சியோடு வருத்தமும் மிக பெரிதாயிற்று என்பதை,

***.. . கல்லென் சீறூர்ப்***
***புனையிழை மகளிர்ப் பயந்த***
***மனைகெழு பெண்டிர்க்கு நோவுமார் பெரிதே***

***(ஐங்கு. 382 : 3 - 4)***

எனுமடிகள் விளம்புகின்றன. எயினர் குல பெண்கள், தலைவியைக் காணாமல் ஈன்றாரும் வளர்த்தாரும் பயின்றாரும் எவ்வாறு நெஞ்சந்தீய்ந்து வருந்துவரோ? என்று நினைத்து வருந்தியுள்ளனர். அஃதாவது தன்மக்கள் ஒரோவழித் துயரத்திற்கு ஏது வாகின்றனர் என்பது புலனாகிறது. தலைவியை, அவள் தமர் அறியாதபடி உடன் புணர்ந்து அழைத்துச் செல்லும் தலைவன், இடைச்சுரத்தின் கண், "தலைவி மராமரத்தின் மலர்களைக் கொய்து, அம் மலர்களைத் தனக்கொன்றும் தன் விளையாட்டுப் பாவைக்கென்றும் பகுக்கும் செயலைக் கண்டு" பெரிதும் மகிழ்ந்து செலவைத் தவிர்த்து நின்றான். இக்காட்சியினைக் கண்ணுற்றக் கண்டோர் நெஞ்சமும் மகிழ்ச்சியில் திழைத்துள்ளன (ஐங்கு. 383).

### இடைச்சுரத்துக் கண்டோரிடம் தலைவி கூறியது

தலைவி, தலைவனோடு பாலை நிலவழியாக உடன்போக்கு மேற்கொண்டாள். அவ்வழியாகத்

தமக்கெதிரே வரும் அந்தணரிடம், "நீயிர் செல்லும் வழியிடத்ததாகிய எம்மூரின் கண் செல்லுங்கால், அங்கு என்னைக் காணாமையால் அலம்வருகின்ற நேரிய கோடுகளமைந்த முன்கையினையுடைய என் தோழிமார்க்கு, "நுந்தோழியாவாள் தன் தாய் விரும்பி வளர்த்த பலரானும் ஆராயப்படும் பேரழகு பின்னும் புதுமையுற்றுப் பொலியும்படி, கடத்தற்கரிய பாலை நெறியைக் கடந்து சென்றனள்" என்று கூறுங்கள்" என இரந்து மொழிந்தனள் (ஐங்கு.384). இங்கு,

**யாய்நயந் தெடுத்த வாய்நலங் கவின**
**(ஐங்கு. 384 : 3)**

என்றது புலன் காட்சியை வெளிப்படுத்துகிறது. அஃதாவது, "தலைவியின் அழகு தலைவனோடு கூடிச்சேருவதால் புத்தொளியும் புதுப்பொலிவும் பெற்று, ஒரு சிறுதும் துன்பமின்றிப் பெரும் மகிழ்ச்சியோடு செல்கின்றாள்" என்பதை உணத்துகிறது.

தலைவனும்தலைவியும்தோழியின்உதவி பெற்றுத் தமரறியாதபடி உடன்போக்கு மேற்கொண்டனர். அங்ஙனம் செல்லுங்கால் தம்மெதிரே தன்னூர் நோக்கிச் செல்லும் வழிப் போக்கரைக் கண்ட தலைவி அவர்களிடம், "வழிப்போக்கர்களே நீவிர் நெடிது வாழ்வீராக! நீயிர் எம்மூர் புக்குழி, யான் பிறந்த நாள் தொடங்கி எனது அழகிய தோளினைப் பெரிதும் விரும்பிப் பாராட்டி வளர்த்துப் பின்னர் தனது அறியாமையாலே என்னை இழந்து அலமந்து மனைக்கண்ணிருந்த, அறநெறி இஃதென அறிதல் இல்லாத மடவோளாகிய என் தாய்க்கு, "நின்மகள் தறுகண்ணையுடைய வொரு காளை போல்வானோடு நெடியதொரு தேரின்கண் ஏறிக்கொண்டு, கொல்லுதலில் வன்மையுடைய வேங்கைகள் பதுங்கிக் கிடக்கின்ற மலைகள் பல பிற்பட்டொழியும் படி வேறு வேறாகிய பலவாகிய கடத்தற்கரிய பாலைக் கொடுநெறிகளைக் கடந்து சென்றுவிட்டாள்" என்று கூறுங்கள்" என வேண்டுகிறாள் (ஐங்கு. 385). இப்பாடலில் தலைவி,

**யெற்கெடுத் திருந்த வறனில் யாய்க்கே**
**(ஐங்கு. 385 : 6)**

என்று கூறியது, "தன்னை நயந்து பாராட்டிப் பின்னர் இயற்ற வேண்டிய அறச்செயல்களைச் செய்யாமல், தன் அறியாமையால் என்னையே இழந்தாள்" எனத்தன்தாயின்அறியாமைக்கு இரங்குவதைக் காணமுடிகிறது.

தலைவியை இடைச்சுரத்துக் கண்டோர் அவள் தாயிடம் கூறியது

தலைவனோடு உடன்போக்குச் செல்கின்ற தலைவியை இடைச்சுரத்தில் கண்டு வந்தோர், "நெடிய சுவர்கள் புறத்தே நிகழும் நிகழ்ச்சிகளை அகத்தோர் காணாமல் மறைத்தல் போன்று நீயும் நின்மகள் மீது பேரன்புடைமையால் அவளுக்கு நன்மை தரும் அறங்களை நினையாது மயங்கினாய்" நின் மகள் விரும்பியவனுக்கு அவளை வழங்கி வதுவையும் நிகழ்த்தி நன்மையடைய வேண்டிய நின்னில்லம் இப்பொழுது சுவரால் மட்டுமே நல்லில்லமாக இருக்கிறது "நீ மருண்டு இந்நெடுஞ்சுவரினூடே இற்செறித்த கொடுமை பொறாது, நின் நல்லில்லில் நின்னொடு வாழ்வதைக் காட்டிலும், யானையும் புலியும் வாழும் கானகவழியில் தன்னை நயந்தவனோடு செல்வதே அறம் எனத் துணிந்து போயினள்" எனக் கூறி நற்றாயை ஆற்றுப்படுத்துவதை,

**புன்கண் யானையொடு புலிவழங் கத்த**
**நயந்த காதலற் புணர்ந்துசென் றனளே**
**நெடுஞ்சுவர் நல்லின் மருண்ட**
**விடும்பை யுறுவிநின் கடுஞ்சூன் மகளே**
**(ஐங்கு. 386)**

எனும் பாடல் விளம்புகிறது.

**தலைவியைத் தேடிச்சென்ற செவிலியிடம் அந்தணர் கூறியது**

தலைவி தலைவனோடு உடன்போக்கு நயந்து பாலை நில வழியாகச் சென்றாள். தன் மகளைத் தேடிப் பின்சென்ற செவிலி,

எதிரே வந்த அந்தணரைக் கண்டு மகள் குறித்து வினவினாள். அந்தணர் செவிலியிடம், “பேதமை நிறைந்த மனைப்பெருங்கிழத்தியே, யாம் கூறுவதைக் கேட்பாயாக: நின்னால் வினவப்படும் அந்த ஒண்டொடி நங்கையைக் காணேமல்லேம் யாங்கள் வருமிச் சுரத்தின் கண்ணே எம்மெதிர் சென்றாளைக் கண்டே வருகின்றேம். அவளும், தன் மனக்கினிய காதலனாகிய காளையொருவன் அவள் நெஞ்சினிக்க நல்லன சொல்லி இனிமையாக நலம்பாராட்டி உடன் செல்லாநிற்ப. சின்னஞ்சிறிய குன்றுகளில் உயர்ந்து விளங்காநின்ற அதோ தோன்றுகின்ற மலையினையுங் கடந்து சென்றுவிட்டனர். இனி நீ அவளைத் தொடர்ந்து செல்வது அறியாமை” எனக் கூறினர் (ஐங்கு. 387). “குன்றுயர் பிறங்கன் மலை” என அந்தணர் விளம்பியது, “சேய்மையில் தோன்றும் பெரிய மலைமீதேறி இறங்கிப் பின் அவர்களைக் காணுதல் மூப்புப் பருவமுடைய செவிலிக்கு அரிது” என்பதை குறிப்பால் உணர்த்துகிறது.

### தலைவியைத் தேடிச்சென்ற செவிலியிடம் கண்டோர் கூறியது

மகட்போக்கிய செவிலி அவளைத் தேடிப் பாலை நிலத்தின் வழியாகச் சென்றாள். அவ்வழியாக வந்த வழிப்போக்கரிடம், தன் மகள் குறித்து வினவினாள். அவர்களும், “அன்னையே ஞாயிற்றின் வெயிற் கொடுமை தனிதற்பொருட்டு, கரிய அடிப்பகுதியையுடைய இந்த யாஅமரத்தினது கோடு கோடாகவமைந்த புல்லிய நிழலின் கண் இளைப்பாறிய பின்னர் இவ்விடத்தினின்றும் சிறிது தொலைவு செல்வாயாயின் நின்னால் வினவப்பட்ட செறிந்த தொடியினையும் பொன்போன்ற நிறத்தினையும் உடைய நின் மகளோடு வெற்றி வேலேந்திய நம்பி சென்ற வழியினைக் காண்பாய்” என்றனர் (ஐங்கு.388). “செறிதொடிப் பொன்னேர் மேனி மடந்தை” எனச் செவிலியிடம் கண்டோர் இயம்பியது, நின் மகள் நலனும் தன்னியற்கை நலனோடும் தன் காதலனோடு செல்வதால் உண்டாகிய புத்தழகும் புரிப்புமுடையவளாகச் செல்கிறாள். எனவே, நீ வருந்தற்க என்றது புலன் காட்சியைக் காட்டுகிறது.

மகட்போக்கிய செவிலி வருத்தத்துடன் பாலை நிலத்தின் வழியாக அவளைத் தேடிச் சென்றாள். ஆங்கு எதிர்ப்பட்ட வழிப்போக்கரை என் மகளொருத்தி பிறள் மகனொருவனோடு செல்லக்கண்டிரோ? என்று வினவினள். அது கேட்ட கண்டோர் செவிலியிடம் காணோமல்லேம்? கண்டனம் என்றனர். இக்கூற்றைக் கேட்ட செவிலி, மீண்டும் தலைவியின் நிலையுணர விரும்பி,

> **செய்வினைப் பொலிந்த செறிகழ னோன்றாள்**
> **மையணற் காளையொடு பைய வியலிப்**
> **பாவை யன்னவென் னாய்தொடி மடந்தை**
> **சென்றன ளென்றி ரைய**
> **வொன்றிய வோவவ ளஞ்சிலம் படியே**
> **(ஐங்கு. 389)**

என வினவினள். புலன் காட்சி என்பது ஒரு தனித்த பிரதிவினையாகும். அஃதாவது, நாம் எண்ணற்ற புலன் தூண்டுதல்களால் தூண்டப்பட்டாலும் அவற்றில் தேவையானவற்றைத் தனிமைப் படுத்தி உரிய பொருளைப் புலன் காட்சியின் வழி அறிவோம். தேவையற்ற புலன் தூண்டுதல்கள் நம்மால் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்படுகின்றன. இங்கு செவிலி, “மையணற் காளையோடு செல்வாள் தன் மகளோ வேறொருத்தியோ என்றுணர்தற் பொருட்டு, “பாவையன்ன ஆய்தொடி மடந்தை” என்றும் “அஞ்சிலம்படி” என்றும் கூறினள். என் மகளாயின் கொல்லிப்பாவை போன்ற பேரெழில் உடையவளாவாள். இன்னும் மணமாகாமையான் அஞ்சிலம்பே அணிந்து இருப்பாள். நீயிர் கண்ட மகள் இத்தகையளோ? என்றும் அப்பெருமகளுடைய அழகிய சிலம்புகள் அணியப்பட்ட மலரடிகள் இந்த உருப்புச் சினந்திகழ் வெம்பாலை நிலத்தின் மேல் படிந்து இயங்கினவோ? கூறுங்கள்” என வினவியுள்ளாள். இஃது

தேர்ந்தெடுத்த பிரதி வினைகளால் நிகழும் புலன் காட்சியைப் புலப்படுத்துகிறது.

மகட்போக்கிய செவிலி அவளைத் தேடிச் செல்வாள் தன்னெதிர் வருவார் பலரையும் நீயிர் என் மகளொருத்தியைக் கண்டனிரோ? என்று வினவக் கண்டோர்,

**நல்லோ ராங்கட் பரந்துகை தொழுது**
**பல்லூழ் மறுகி வினவு வோயே**
**திண்டோள் வல்வில் காளையொடு**
**கண்டனெ மன்ற சுரத்திடை யாமே**
**(ஐங்கு. 390)**

எனத் தாம் கண்டவாறு கூறினர். அஃதாவது, செவிலி என் மகளொருத்தியைக் கண்டனிரோ? என்று வினவியதற்கு, "சுரத்திடை திண்டோள் வல்வில் காளையொடு கண்டனம்" என்று மட்டும் கூறினர். தலைவியைப் பற்றிப் பிறிதொன்றும் கூறாது விடுத்துள்ளனர்.

## முடிவுகள்

ஒருவரின் புலன்காட்சிப் பெரும்பாலும் அவரது மனநிலையையும் சூழ்நிலையையும் பொறுத்தே அமைகிறது. மகன்றில் பறவை காதல் வாழ்க்கையில் சிறிதும் பிரியாது வாழ்விலும் சாவிலும் சேர்ந்தே வாழும் இயல்புடையவை என்பதை அறிந்த கண்டோர், மராமரத்தின் வரிய நிழலில் இணைந்து வீற்றிருந்த தலைவன் தலைவியை மகன்றில் பறவையோடு ஒப்புமைப்படுத்தி, "உடன்புணர் கொள்கைக் காத லோரே" என விளம்பியுள்ளனர்.

தலைவன் தலைவியின் வருகையைக் கண்ணுற்று மகிழ்ந்த எயினரின் புலன் காட்சிப் பார்வை மறு புள்ளியாகிய பறவைகளின் ஒலிகளைக் கேட்கும்போதெல்லாம் அச்சப்பட்ட தலைவியின் முகக்குறிப்பிற்கு மாறியது, கூர்ந்த கவனிப்பில் நிகழ்ந்த புலன் காட்சியின் வெளிப்பாடாகும்.

மகட்போக்கிய செவிலி வருத்தத்துடன் எதிர்ப்பட்ட வழிப்போக்கரை என் மகளொருத்தி பிறள் மகனொருவனோடு செல்லக் கண்டிரோ? என்று வினவினள். அது கேட்ட கண்டோர் செவிலியிடம் காணோமல்லேம்? கண்டனம் என்றனர். இக்கூற்றைக் கேட்ட செவிலி, மீண்டும் தலைவியின் நிலையுணர விரும்பி, செவிலி, என் மகளாயின் கொல்லிப்பாவை போன்ற பேரெழில் உடையவளாவாள். இன்னும் மணமாகாமையான் அஞ்சிலம்பே அணிந்து இருப்பாள். நீயிர் கண்ட மகள் இத்தகையளோ? என்றும் அப்பெருமகளுடைய அழகிய சிலம்புகள் அணியப்பட்ட மலரடிகள் இந்த உருப்புச் சினந்திகழ் வெம்பாலை நிலத்தின் மேல் படிந்து இயங்கினவோ? கூறுங்கள்" என வினவியது தேர்ந்தெடுத்த பிரதி வினைகளால் நிகழும் புலன் காட்சியைப் புலப்படுத்துகிறது.

## பார்வை நூல்கள்

1. அகோல்கர் வி.வி. வேதமணிமனுவேல் என். (த.ஆ.)., 2018. சமூக உளவியல், சென்னை : தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்.
2. சோமசுந்தரனார் பொ.வே. 2009. ஐங்குறுநூறு, சென்னை : கழக வெளியீடு.
3. பரமேஷ்செ.ரா. 2018. சமூக உளவியல், சென்னை : தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்.
4. Aronson, Elliot; Wilson, Timothy D.; Akert, Robin M. (2010). Social Psychology Seventh Edition, Upper Saddle River, NJ : Pearson Education.